பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: தை 17 (31—1—68) புதன் ★ வெளியூர்: தை 18 (1—2—68) வியாழன் [இதழ்: 190

## தலைமைச் செயலகத்தில் அண்ணா படம்—

### பெரியார் திறக்கிறார்

"தமிழக அரசுத் தலைமைச் செயலகத்தில் உள்ள காரின் அரங்கில் பிப், 2-ம் நாள் மாலை 5 மணிக்கு முதலமைச்சர் அண்ணா அவர்களின் உருவப்படத்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் திறந்து வைப்பார்; இந்த நிகழ்ச்சிக்குக் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமை தாங்குவார்" என்று தலைமைச் செயலக அலுவலர் சங்கத் தலைவர் திரு. கே.வி. முனிசாமி தெரிவித்தார்.

# எல்லோரும் ஒரு மொழியை ஏற்கும் காலம் வரட்டும்!

## அதுவரையில் மொழிப் பிரச்சினையை ஒத்திவைப்போம்!

## ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கட்டும்

### ஆந்திர மக்களிடையே அண்ணா கருத்துரை

தெனாலி, சன. 30—

"மொழிப் பிரச்சினையைச் சில ஆண்டுகளுக்கு ஒத்தி வைத்து அதுவரை ஆங்கிலத்தையே ஆட்சிமொழியாக நீடிப்பதுதான் நாட்டின் முற்றுரிமையையும், ஒற்றுமையையும் உள்ளத்தில் கொண்டுள்ள அனைவரின் கடமையுமாகும்.

"இந்தியாவின் முற்றுரிமையில் உளமார்ந்த நம்பிக்கை வைத்தே அதனை ஆதரிக்கிறேன்; பிரிவினையை நான் ஆதரிக்கவில்லை; ஆனால் நம்மில் ஒவ்வொருவரும் சமவுரிமையுடன் வாழவேண்டும் என்று விரும்புகிறேன்; எசமானர்களாகவும் சேவகர்களாகவும் வாழ்வதை விரும்பவில்லை"

என்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இங்கு மொழிப் பிரச்சினை குறித்துப் பேசுகையில் விளக்கமளித்தார்கள்.

தெனாலி மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த தேசிய மொழி பற்றிய கருத்தரங்கில் அண்ணா அவர்கள் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மொழிப் பிரச்சினையை ஒத்தி வைத்து, சில ஆண்டுகள் கழித்து—உரிய நேரமும் சூழ்நிலையும் ஏற்படும்போது—கல்வியாளர்களும், அரசியல் தலைவர்களும் கூடி முடிவு செய்யட்டும்!

ஆட்சி மொழி என்று ஒன்று வேண்டும் என்று யாரையும் மக்கள் கேட்கவில்லை. இந்தப் பிரச்சினை முழுவதையும் உண்கியதே மத்திய அரசுதான்!

ஐயாயிரம்—ஆறுயிரம் ஆண்டுக்கு முந்திய தமிழ் மொழியும், தமிழ் இலக்கியங்களும் இருக்கும்போது, இலக்கிய இலக்கண வளமற்ற—திண்மையற்ற—சிறப்பற்ற ஒரு மொழியை—இந்தியை ஆட்சி மொழியாக்குவானேன்? எந்த மொழி நாட்டின் ஆட்சிமொழியாகத் தகுதி பெற்றது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

நாட்டில் ஆங்கிலேயருக்கு எதிரான உணர்ச்சி பெருகியிருந்தபோது, ஆங்கிலேயரை வெளியேற்றிச் சுதந்தரம் பெற்ற விழாக்கோலத்தில், அவசர அவசரமாக ஆட்சிமொழி பற்றி அரசியலமைப்பு அவை முடிவு செய்தது; அதுவும் அவைத் தலைவரின் சிறப்பு வாக்கின் துணைகொண்டு முடிவு செய்யப்பட்டது.

தீண்டாமையை ஒழிக்கவும், எழுத்தறிவின்மையைப் போக்கவும், இன்னபிற இன்றியமையாத் தேவைகளை நிறைவேற்றவும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் உரிய இலட்சியக் கொள்கைகள் வகுக்கப்பட்டிருக்கும்போது, ஆட்சிமொழி பற்றி மட்டும் மத்திய அரசு

ஏன் தனியாகக் கவனிக்க வேண்டும்?

இராஜாஜி முதலமைச்சராக இருந்த காலத்தில், அவர்தான் முதன் முதலாக அன்றைய சென்னை மாநிலத்தில் இந்தியைக் கட்டாய பாடமாகப் புகுத்தினார்; அவரேதான் இன்று, 'ஆட்சி மொழியாக இருக்க இந்தி தகுதியற்றது' என்று நன்கு ஆராய்ந்து பார்த்துக் கூறுகிறார்—எதிர்க்கிறார்.

நான் இங்கு மொழிப் பிரச்சினையைக் கிளப்புவதற்காக வரவில்லை; எல்லாப் பிரிவு மக்களும் முழு மனதோடு ஓர் இந்திய மொழியை ஏற்றுக்கொள்ளும் வரை, ஆங்கிலத்தை நீடிக்கும்படி வேண்டிக் கொள்ளவே வந்தேன்."

## தெனாலியில் அறிஞர் அண்ணா

### ஆந்திர அமைச்சர் தலைமையில் நகராட்சி வரவேற்பு

தெனாலி, சன. 30—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஆந்திரத்தைச் சேர்ந்த தெனாலி நகராட்சிமன்றம் நேற்று மாலை வரவேற்பு அளித்தது.

நகராட்சிமன்ற மண்டபத்தில் நடந்த இந்த வரவேற்பு விழாவிற்கு ஆந்திர மதுவிலக்கு அமைச்சர் திரு. வி. சத்தியநாராயண ராவ் தலைமைவகித்தார்.

நகராட்சிமன்றத் தலைவர் திரு. பந்லா புல்லையா வரவேற்பு மடலைப் படித்து, ஒரு வெள்ளிப்பேழையில் வைத்து அண்ணாவிடம் அளித்தார்.

இங்குள்ள ஏழு தூண்கள் கொண்ட தியாகிகளின் சின்னத்தைப்போல் வெள்ளியில் செய்யப்பட்ட ஒரு மாதிரிச் சின்னத்தையும் அவர் அண்ணாவுக்கு அன்பளிப்பாக அளித்தார்.

## தமிழக என். சி. சி. நிலை

### டெல்லி அரசின் சங்கடம்

புதுடில்லி, சன. 30—

மொழிப் பிரச்சினையையொட்டித் தமிழக அரசு, தேசிய மாணவர் படைப் பயிற்சி அணியை (என். சி. சி.) இயங்காமல் தற்காலிகமாக நிறுத்திவைக்க முடிவு செய்திருப்பதையொட்டி, இந்தியப் பாதுகாப்புத் துறையினருக்குச் சங்கடமான நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழகக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இப்படைப் பயிற்சியை நிறுத்தி வைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பது குறித்து, தமிழகத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும், டெல்லியிலுள்ள என். சி. சி. இயக்குநர் அலுவலகத்திற்குத் தந்திகள் வந்து குவிந்த வண்ணமுள்ளனவாம்.

என்.சி.சி.—அணியின் கட்டளைச் சொற்கள் ஆங்கிலம் அல்லது தமிழில்தான் இருக்க வேண்டும் என்றும் இந்திக் கட்டளைச் சொற்களைப் பயன்படுத்தக்கூடாது என்றும், இந்திச் சொற்களைக் கைவிடுவதற்கு மத்திய அரசு இணங்காவிடில், என்.சி.சி.—அணிகளெல்லாம் கலைக்கப்படும் என்றும், முதலமைச்சர் அண்ணா அவர்கள் அறிவித்தது தெரிந்ததே.

இது தொடர்பாக வந்துகொண்டிருக்கும் தந்திகளெல்லாம் பரிசீலிக்கப்பட்டு வருவதாகப் பாதுகாப்புத் துறை அமைச்சகத் தகவல் கூறுகிறது.

## தமிழகத்தில் திறந்தவெளி—பண்ணைச் சிறைகள்!

### நிலம் பயிரிடும் வேலைகளில் கைதிகள் ஈடுபடுவர்

சென்னை, சன. 30—

தமிழகத்தில் புதுவகையான சிறைச்சாலைகளை ஏற்படுத்தத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

திறந்தவெளிச் சிறை அல்லது பண்ணைச் சிறை அமைப்பதற்கான வகையில், தமிழ்நாட்டில் உள்ள பெரிய சிறைச்சாலைகள்—குற்றவாளிகள் சீர்திருத்தக் கல்வி நிலையங்கள் ஆகியவற்றையொட்டிய பகுதியில், பயிரிடத் தகுந்த நிலம் கிடைக்குமா என்று தமிழகச் சிறைத் துறை அதிகாரிகள் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

சென்னை, மதுரை, திருச்சி, கோவை, வேலூர், புதுக்கோட்டை, சேலம் ஆகிய இடங்களில் உள்ள மத்தியச் சிறைச்சாலைகளின் அதிகாரிகளையும், பாளையங்கோட்டை குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளியின் அதிகாரியையும், சம்பந்தப்பட்ட சிறைச்சாலைக்கு அருகில் 200 ஏக்கர்வரை பயிரிடும் நிலம் கிடைக்க ஆவன செய்யுமாறு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

சிறைச்சாலைகளின் தலைமை அதிகாரியான திரு. ஈ. எல். ஸ்ட்ராசி இத்தகவலை அறிவித்தார்.

"இப்படி அமைக்கப்படும் சிறைகளில் கைதிகள் தப்பியோட முடியாத அளவுக்கு மட்டும் பார்த்துக் கொள்ளப்படும்" என்றும் அவர் கூறினார்.

"தப்பியோடக் கூடியவர்களா என்று கண்டறிந்தே, இந்தச் சிறைச்சாலைக்குக் கைதிகள் அனுப்பப்படுவர்" என்றும், குறைந்த காலத் தண்டனை பெற்றவர்களே இச்சிறைகளுக்கு அனுப்பப்படக்கூடும் என்றும், நீண்டகால—ஆயுள் தண்டனை பெற்றவர்கள், தங்கள் தண்டனைக் காலத்தில் மூன்றில் இரண்டு பகுதியைக் கழித்த பிறகே இந்தச் சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவர் என்றும் அவர் விளக்கினார்.

ஏற்கனவே இந்த மாநிலத்தில், சிங்காநல்லூரில் சிறிய அளவிலான திறந்தவெளி பண்ணைச் சிறைஇருந்துவருகிறது என்றும், அங்கு 20 ஏக்கர் நிலம் இதற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்றும் அங்கு புன்செய்ப் பயிர்கள் பயிரிடப்படுவதாகவும், அந்த இடத்தில் கிணறுகள் வெட்டி, நன்செய் நிலமாக மாற்றலாம் என்று நம்புவதாகவும், அதேபோல் சேலம்—ஓமலூர் சாலையில் ஒரு சிறிய பண்ணைச் சிறை இருந்துவருவதாகவும் கைதிகள் அங்கேயே கொட்டகை போட்டுக் கொண்டு வருகின்றனர் என்றும், அவர்கள் தப்பியோடாமலிருக்க மட்டுமே பாதுகாப்பு வைக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

## வங்க அரசியல்கூத்து!

### சட்டமன்றத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

கல்கத்தா, சன. 30—

மேற்கு வங்கச் சட்டமன்ற அவைத் தலைவர் திரு. விஜய்குமார் பானர்ஜி, துணை அவைத் தலைவர் திரு. அரிதாஸ் மித்ரா ஆகிய இருவர்மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை, முதலமைச்சர் பி. சி. கோஷின் சனநாயக முற்போக்கு அணியைச் சேர்ந்த நால்வர் கொண்டுவந்திருக்கின்றனர்.

"பதவியிலிருந்து அவர்களை நீக்கவேண்டும்" என்று தீர்மானம் கோருகிறது.

இப்போதுள்ள சட்டமன்ற அவைத் தலைவரும் துணைத் தலைவரும், முன்னாள் முதலமைச்சர் அஜாய் முகர்ஜியின் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் என்பது நினைவுகூரத்தக்கது.

## ரூ. 12,000 மதிப்புள்ள கடத்தல் அரிசி

### திடீர் சோதனையில் பிடிபட்டது

சென்னை, சன. 30—

செங்கற்பட்டு—காஞ்சிபுரம் பாதையில் உள்ள வாலாசாபாத், பாலூர் இரயில் நிலையங்களில் இன்று விடியற்காலை நடத்திய திடீர் சோதனையின் விளைவாக, ரூ. 12,000 மதிப்புள்ள 115 குவிண்டால் அரிசி பிடிபட்டது. இது தொடர்பாக 20 பேர் கைது செய்யப்பட்டு அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

## மீண்டும் இஸ்ரேல் போர் ஆயத்தம்?

புத்தாண்டில் இஸ்ரேல் மீண்டும் போர்ப் பறை முழங்குகிறது!

"20 ஆண்டுப் போருக்கு இஸ்ரேல் தயாராக இருக்கவேண்டும்" என, அமெரிக்காவுக்குப் புறப்படு முன்னர் இஸ்ரேலிய தலைமை அமைச்சர் எஷ்கோல் முழங்கியுள்ளார்.

இராணுவத்தை வலுப்படுத்தும் திட்டத்துடனேயே இஷ்கோல், அமெரிக்கா, பிரிட்டன், கானடா முதலிய இடங்களுக்குச் செல்லுகிறார்.

# என்றும் ஏற்பட்டிராத அரிய வாய்ப்பு

## பேரறிஞர் அண்ணு உருவாக்கிவரும் பொற்காலம்

### பண்டைத் தமிழரின் சிறப்பை மீண்டும் நிலைநாட்டுவோம்

### குன்னூரில் சட்டப் பேரவைத் தலைவர் ஆதித்தனுர் முழக்கம்

சன. 25-ம் நாளன்று குன்னூர் சவகர்பேட்டையில் நடந்த வீரவணக்கப் பொதுக்கூட்டத்தில், தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனுர் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு:—

#### தியாகம் வீண் போகவில்லை!

"இந்தியை எதிர்த்துத் தமிழ் மக்கள் கடந்த 30 ஆண்டுகளாகப் போராடி வருகிருர்கள்.

1937-ல் தாளமுத்துவும், நடராசனும் சிறையில் உயிர்நீத்தார்கள்.

அன்று முதல் பல தமிழர்கள், தமிழுக்காக உயிர்த் தியாகம் செய்து வந்திருக்கின்றனர்.

சிவலிங்கம், அரங்கநாதன் போன்றவர்கள் தமிழுக்காகத் தீக்குளித்தார்கள்! உடம்பில் தீ பற்றிக்கொண்டு எரியும்பொழுதும், 'தமிழ் வாழ்க' என்று வீர முழக்கமிட்டுச் செத்தார்கள்!

அவர்களை நினைக்கும்பொழுது நமக்கெல்லாம் வீரம் இருப்பதாகத் தெரியவில்லை! அவர்கள் வீரத்தின்முன்—தியாகத்தின் முன் நாம் தலைகுனிய வேண்டும்!

அவர்கள் செய்த தியாகத்தினுல் இன்றைக்குத் தமிழ் காப்பாற்றப்பட்டு—இந்தி, தமிழ்நாட்டிலிருந்து ஒழிக்கப்பட்டிருக்கிறது!

காங்கிரசுக்காரர்கள் 5 அல்லது 10 நாட்கள் சிறையிலிருந்துவிட்டு, 'தியாகி'கள் என்று கூறி, 5—10 ஏக்கர் நிலத்தையும் வாங்கிவிட்டார்கள்!

தீக்குளித்த சிவலிங்கம், அரங்கநாதன் போன்றவர்கள் செய்தது தியாகமா—இவர்கள் செய்தது தியாகமா—என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

#### இந்திக்கு இனி கண்காட்சியில்தான் இடம்!

இந்தி தமிழ்நாட்டில் ஒழிந்தது! பள்ளி, கல்லூரிகளில் இந்தி இனிமேல் விருப்பப் பாடமாகக்கூட இருக்காது! 'என். சி. சி. யில் இந்தி ஒழிக்கப்படாவிட்டால், அது கலைக்கப்படும்' என்று டெல்லிக்கு அறிவித்துவிட்டோம்! இனி இந்தியைப் பார்க்கவேண்டுமானுல், கண்காட்சியில் போய்தான் பார்க்கலாம்!

#### மதிக்க இயலுமா?

சட்டமன்றத்தில் இந்தியைப் பற்றித் தீர்மானம் வந்தபொழுது காங்கிரசார் நடுநிலைமை வகித்தார்கள்.

'இந்தி வேண்டாம்' என்று சொன்னுல், டெல்லியிலுள்ள காங்கிரசு எசமானர்கள் இவர்களைத் தட்டிக் கேட்பார்கள்! இதற்குப் பயந்துகொண்டு காங்கிரசுக்காரர்கள் நடுநிலைமை வகித்துவிட்டார்கள்!

தமிழ் மொழியை எதிர்ப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி—அவர்கள், தமிழ் மொழியின்—தமிழ் நாட்டின் துரோகிகள்! அவர்களை மக்கள் மதிக்கக்கூடாது!

#### மானமரியாதையுடன் வாழ வேண்டாமா?

ஜபல்பூரில் காமராசர், அனைத்திந்தியக் காங்கிரசு மாநாட்டை, கை சைகையாலேயே நடத்தினுர்; காரணம், இந்தியைத் தவிர வேறு மொழியில் யாராவது பேசினுல், அங்கு கூடியிருந்த இந்தி வெறியர்கள் கூச்சல் போட்டார்கள்; காமராசர் அதைப் பார்த்து அவமானப்பட்டதாகக் கருதவில்லை!

அவருடைய பதவிக் காலம் முடிந்தபொழுது, 'எல்லோரும் விரும்பினுல் மீண்டும் காங்கிரசுத் தலைவராக இருக்கிறேன்' எனக் கூறினுர்; ஆனுல், ஒரு வட இந்தியன்கூட காமராசரைப் பார்த்து, 'நீங்களே மீண்டும் தலைவராக இருங்கள்' என்று கேட்டுக் கொள்ளவில்லை. அப்படியிருந்தும், இன்றைக்கும் வட இந்தியர்களுக்கு அவர், அடிமையாகிக் கிடக்கிருர்! அவரைப் போல் நாம் எல்லோரும் மானம் கெட்டு வட இந்தியர்கள் சொற்படி நடக்கமுடியுமா?

#### சிரிப்பு நடிகரா அவர்?

தமிழ் நாட்டில் இன்றைக்குத் தமிழ் மணம் கமழ்கிறது! சென்னைக் கோட்டையில், 'தமிழக அரசு' என்ற அந்த மின் எழுத்துக்கள், உலகத்தினரைப் பார்த்து, 'வாருங்கள்; வாருங்கள்' என்று அழைப்பதுபோல் உள்ளன!

இதையெல்லாம் பார்த்து, பக்தவத்சலம் கிண்டல் செய்கிருர்—சினிமா சிரிப்பு நடிகர் மாதிரி!

#### தமிழகம் காண்பது சாமானிய மாற்றமா?

கழக ஆட்சியில் பஸ் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது! அமைச்சர்கள் தங்கள் சம்பளத்தைப் பாதியாகக் குறைத்துக் கொண்டுள்ளனர்! கட்சிக் கூட்டங்களுக்குச் செல்லும்போது சொந்தச் செலவில் அல்லது கட்சி செலவில் செல்கிருர்கள்!

ஆனுல், ஆட்சியில் காங்கிரசார் இருந்தபோது இந்நிலை உண்டா? அமைச்சராக இருந்த கக்கன், ரூ. 3,15,000 பயணப் படிச் செலவாக வாங்கியுள்ளார்!

பக்கத்திலே உள்ள கேரள அரசு—கம்யூனிஸ்டு அமைச்சரவைகூட, சம்பளத்தை உயர்த்திக் கொண்டுவிட்டிருக்கிறது!

அண்ணு அவர்கள், 'கழக ஆட்சியில், மக்களுக்கு எப்படியாவது நல்லதைச் செய்துவிட வேண்டும்' என்று குறிக்கோளுடன் பாடுபட்டுவருகிருர்!

1965-ல் மாணவர்களைச் சந்திக்க பக்தவத்சலம் மறுத்தார்; ஆனுல் இன்று பேரறிஞர் அண்ணு, நான்கு நாட்கள் இரவு முழுவதும்—விடிய விடிய உட்கார்ந்து, மாணவர்கள் சொல்வதையெல்லாம் பொறுமையாகக் கேட்டார்—இது எவ்வளவு பெரிய மாற்றம்!

1965-ல் துப்பாக்கியால் மாணவர்களைச் சுட்டு வீழ்த்தினுர்கள்! இன்றைக்கு அண்ணு அவர்கள், மாணவர்களைச் சந்தித்துப் பேசுகிருர்—இது மாற்றமில்லையா?

#### தமிழக மக்கள் சிந்திக்கத் துவங்கட்டும்!

உலகத் தமிழ் மாநாட்டில் கண்ட காட்சிகளையெல்லாம் பார்த்த தமிழ் மக்கள், 'இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இப்படியெல்லாம் வாழ்ந்த நாம், எப்படி இப்படி வீழ்ந்துவிட்டோம்' என்றெல்லாம் சிந்திக்கத் துவங்கிவிட்டனர்!

'தமிழர்கள் எப்படி வாழவேண்டும்—எம்மாதிரியான தமிழகத்தை உருவாக்க வேண்டும்' என்பதை, தம்முடைய கண்களால் பார்ப்பதாகப் பேரறிஞர் அண்ணு அவர்கள், தமிழ் மாநாட்டில் கூறினுர்.

கப்பலோட்டிய தமிழர்கள் இன்று இப்படி நசிந்து கிடப்பது ஏன்?—முத்துகளையும் மாணிக்கக் கற்களையும் எடுத்துக் கடல்கடந்து சென்று வணிகம் செய்த நாம் இன்று இவ்வளவு வாட்டத்துடன் இருப்பது ஏன்?—என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! அத்துடன் நிற்காமல், அந்தத் தமிழ்நாட்டை உருவாக்க ஒன்றுபடுங்கள்!

#### அந்த நல்ல நாள் வெகு தூரத்தில் இல்லை!

'தமிழனின் சுட்டு விரல் ஆடினுல், உலகமே ஆடும் நாள் வரவேண்டும்' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினுர்!

அந்த நல்ல நாள் வெகு தூரத்தில் இல்லை! உலகமெங்கும் தமிழ் பரவும் நாள் நெருங்கிவிட்டது! அதற்கான அரிய சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது! அதை நாம் நழுவவிட்டுவிடக்கூடாது!

டெல்லியுடன் பெரிய மோதல் வரவிருக்கிறது; அன்றைக்கு நான்குகோடி தமிழ் மக்களும் ஒன்ருகத் திரண்டு நிற்க வேண்டும். அத்துடன் பேரறிஞர் அண்ணு அவர்களின் சொற்படி நடக்கவேண்டும்—அண்ணு இடும் ஆணையை அப்படியே ஏற்று நாம் நடக்க வேண்டும்.

அண்ணு அவர்கள், 'செய்' என்பதை நாம் செய்யவேண்டும்; 'வேண்டாம்' என்பதை விட்டுவிட வேண்டும்.

அப்படி அவருடைய சொற்படி நடந்தால் நாம் அடையவேண்டிய பொற்காலத்தை அடைவது உறுதி!

#### உதறித் தள்ளுவீர்!

இச்சமயத்தில், காங்கிரசு செய்யும் பொய்ப் பிரசாரத்தில் ஏமாந்துவிடக் கூடாது!

இந்தி மூலம் தமிழ் நாட்டை ஆள நினைக்கும் காங்கிரசை, மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்!

டெல்லியை நம்பித் தமிழைக் காட்டிக்கொடுக்க நினைக்கும் காங்கிரசை மக்கள் உதறித் தள்ளவேண்டும்!

கப்பலோட்டிய நாம்—கடல் கடந்து வணிகம் செய்த நாம்—ஆங்கிலக் கம்பெனியார் நடத்திய இரயில், தந்தி இலாகாக்களை நடத்த அருகதை அற்றவர்களா?—சிந்தியுங்கள்!

#### அரியதோர் வாய்ப்பு—நழுவ விடாதீர்!

அருமைத் தமிழ் மக்களே—உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்—வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்—ஒன்றுபட்டு நில்லுங்கள்! வருகிற அரிய வாய்ப்பை நழுவ விடாதீர்!

அந்த நல்ல தமிழகத்தை அமைக்க—நம் குழந்தைகளின் வருங்காலம் வளமடைய நான்கு கோடி தமிழ் மக்களும் ஒன்று கூடி ஒருமித்து நிற்கவேண்டும்!

தமிழுக்காக உயிர்த் தியாகம் செய்தவர்கள்மீது ஆணையிட்டு—உறுதிபூண்டு அண்ணு காட்டும் வழியில் செல்வோம்! வள மிக்க தமிழகத்தைக் காண்போம்!"

கூட்டத்தில் தோழர் கே. பி. முருகேசன் அவர்களும் பேசினுர். தோழர் சோமாசு நன்றி கூறினுர்.

#### வரவேற்பு

குன்னூர் இரயில்வே லெவல் கிராஸ் அருகில் திரு. ஆதித்தனுரை, திருவாளர்கள் கே. பி முருகேசன், டி.வி.எஸ். மணி, உதகை நகர தி. மு. கழகச் செயலாளர் நஞ்சுண்டன், காந்தல் ஆர். ராசு, இப்ரகீம் மற்றும் ஏராளமான மக்கள் மாலையிட்டு வரவேற்பு.

#### உதகையில்

உதகைப் பொதுக்கூட்டம், தோழர் நஞ்சுண்டன் தலைமையில் நடந்தது; அங்கும் இதே கருத்தை வலியுறுத்தி ஒருமணி நேரம் ஆதித்தனுர் பேசினுர்.

#### உறுதி கூறியவர்கள் போக்கு

திரு. ஆதித்தனுருக்கு கறுப்புக் கொடி காட்டப்போவதாக அறிவித்த உதகை பத்மஸ்ரீ சிவாஜி கணேசன் மன்றத்தைச் சேர்ந்தவர்கள் என்போரை, ஆதித்தனுர் தம் சொந்தக் காரை அனுப்பி, தாம் தங்கியிருந்த 'தமிழக' மாளிகைக்கு அழைத்துவரச் செய்து, 45 நிமிட நேரம் அவர்களுடன் பேசி விளக்கம் தந்தார்; 'கறுப்புக் கொடி' காட்டுவதில்லை என்று உறுதி கூறிச் சென்ற அவர்கள், வாக்குறுதியை மீறி, கறுப்புக் கொடி காட்டுவதாகக் கூறி மார்க்கெட் அருகில் நான்கு பேர் நின்றுகொண்டிருந்தனர்; இதையறிந்த திரு. ஆதித்தனுர், அவர்களுக்குப் போலீசுப் பாதுகாப்பு தரும்படியும், கைது செய்யவேண்டாம் என்றும் போலீசு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

---

சின்ன விஷயம்

## மொட்டைத் தலையில் பட்டம் கட்டுவார்கள்!

உலகப் பெரியார் காந்தி பிறந்து நூறு ஆண்டுகள் ஆகின்றன அல்லவா? அந்த நூற்ருண்டு விழாவைக் கொண்டாட ஒரு குழு அமைக்கப்பட்டு ஏற்பாடுகள் தொடங்கிவிட்டன!

இதையொட்டி, சர்வோதயத் தலைவர்களில் ஒருவரான திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம், அண்மையில் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார்; அது இது:—

> "சனவரி 30-ந் தேதியிலிருந்து அத்தாட்சி பெற்ற தொண்டர்கள், சென்னை நகரில் வீடு வீடாகச் சென்று ஒரு ரூபாய் விலையுள்ள ஓர் உறுதிமொழிச் சீட்டு வழங்குவார்கள்; அதை வாங்குகிறவர் அதில் கையெழுத்திட்டு, பிப்ரவரி 11-ந் தேதி அஞ்சலி நிலையங்களில் வைக்கப்படும் காந்தி வாக்குப் பெட்டிகளில் போடவேண்டும்."

காந்தியாரின் நல்ல கொள்கைகளைப் பரப்பிட—அதன் வழி மக்கள் நின்றிட ஏற்பாடு செய்கிற திட்டம் என்ற அளவில், இதில் ஒன்றும் தப்பு இல்லை!

காந்தியார்மீது — அவர் கொள்கைகள்மீது பற்றுக் கொண்டவர் காங்கிரசுக்காரராகவும் இருக்கலாம்—கழகத்துக்காரராகவும் இருக்கலாம்.

அறப்போர் முறை, மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்புப் போன்ற காந்தியாரின் உயிர்க் கொள்கைகளில் உள்ள பிடிப்பு காரணமாகப் பலரும் வேறுபாடு இன்றிக் காந்தியார் உறுதிமொழிச் சீட்டில் கையெழுத்திடலாம்.

உறுதிமொழிச் சீட்டில் என்ன இருக்கும் என்பதும் ஒரு பிரச்சினையே; ஏனென்ருல், சனநாயகக் கொலைக்கஞ்சா—பழிக்கஞ்சாப் பாதகர்களாகக் காங்கிரசுக்காரர்கள் இருக்கிருர்களே—அதனுல்தான், நமக்குச் சந்தேகம் தோன்றுகிறது; அவர்கள் திருவிளையாடல்களைக் கண்டவர்களாயிற்றே நாம்!

காங்கிரசு அல்லாதவர் காந்தியார் விழாவில் கலந்துகொள்ளாமல் இருந்தால், 'உலகம் போற்றும் உத்தமரை வாயாலே போற்றக்கூட மனமில்லையே' என்பார்கள் அவர்கள்! எல்லாரும் போற்றுகிருர்கள் என்ருல், 'காந்தியார் கொள்கைகள் காங்கிரசின் கொள்கைகள்; அதனுலே எங்களுக்கே சிறப்பு' என்று சில பெருங்காயப் பாண்டங்கள் பழங்கதை பேசும்!

கொல்லைக் காட்டில் குள்ள நரியைக் குடி வைத்ததுபோலக் காங்கிரசுக்காரர்களை 20 ஆண்டுகள் காந்தியாரின் வளமான கொள்கைகள் மத்தியில் உலவவிட்டதால், அவர்கள் அந்தக் கொல்லையைச் சுடுகாடு ஆக்கிவிட்டிருக்கிருர்கள்! காங்கிரசுக்காரர்கள்தான் காந்தியாரின் கொள்கைகளுக்குச் சமாதி கட்டியவர்கள்!

காங்கிரசு ஆளும் மாநிலங்களில் ஒன்றிரண்டு நீங்கலாக மற்றெங்கும் காந்தியாரின் உயிர் மூச்சான மதுவிலக்குத் தவிடுபொடி ஆகிவிட்டதே! ஆனுல், காந்தியார் பேரைச் சொல்லிப் பித்தலாட்டம் செய்வதில் மட்டும் இன்னமும் அவர்கள் துவளாமல் இருக்கிருர்கள்! அதனுலேதான் நமக்குச் சந்தேகமே வருகிறது!

காந்தியார் பண்பு நலன்களைப் பாராட்டி உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டு காந்தியார் வாக்குப் பெட்டியில் போடப்போய், அது காந்தியாரின் காங்கிரசுக்கு—'இந்தி பொது மொழி' என்ற அவர் திட்டத்துக்குப் போடப்பட்ட செல்வாக்கு என்றுகூடத் தமிழ்நாடு காங்கிரசின் கடைநிலைப் பேச்சாளர்கள் பேசுவார்களே!

புரிந்தவர்களுக்குப் புரியும்—இவர்கள் இலட்சணம்! காங்கிரசின் இருபதாண்டு சாதனை (?!) களைச் சொல்லி, காந்தியார் படம் போட்டுக் காட்டிடத் தம் பக்கம் மக்களை ஈர்க்க முடியாதவர்கள் அவர்கள்! அது அவர்களுக்கே தெரியும்!

கடையும்போது வராத வெண்ணெய், குடையும் போதா வரப்போகிறது—அதொன்றுமில்லை!

ஆனுல் காந்தியார் மறைந்து போனவர்! வாழ்ந்த நாளில் அவர்மீது யாராவது அரசியல் காரணங்களுக்காக வெறுப்புக் கொண்டிருந்தால்கூட, அவர் மறைந்த பிறகு அவரைப் பாராட்டவே செய்வர்; அதுதான் பண்பு; ஆனுல், மொட்டைத் தலையில் பட்டங்கட்டி ஆளத் தயாராகிறமாதிரி பின்னெரு நாளில் தமிழ்நாடு காங்கிரசுக்காரர்கள்,

> "சென்னை நகரில் இத்தனை பேர் காங்கிரசின் கொள்கைகளுக்கு ஆதரவாக வாக்களித்தனர்"

என்று திரிபுவாதங்களில் இறங்கக்கூடாது என்பதற்காகவே இந்த எச்சரிக்கை!

காந்தியார், 'கட்சிக்கு அப்பாற்பட்ட ஒரு பொதுவான மனிதர்' என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், எந்த அரசியல் கட்சியும்—குறிப்பாகக் காங்கிரசு, இந்தக் காந்தி நூற்ருண்டு விழாவைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. அப்படி ஏதும் நடக்காது என்று சர்வோதயத் தலைவர்கள் உறுதி அளிப்பார்களானுல், காந்தி வாக்கெடுப்பில் நமக்கொன்றும் ஆட்சேபம் இல்லை!

—பூரணன்

மதுரை-இராமநாதபுரம் மாவட்டங்களில்

# கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன்

## அரசின் மொழிக் கொள்கை விளக்கம்— ாணவர்களின் உற்சாகமான வரவேற்பு

### மதுரை நகரில் குடியரசு நாள் விழா அணிவகுப்பை ஏற்ருர்

சனவரி 25-ஆம் நாள் காலையில் விமானம்மூலம் சென்னையிலிருந்து மதுரை வந்து சேர்ந்த கல்வி பமைச்சர் இரா. நெடுஞ்செழியன், முற்பகல் 11-மணியளவில் மதுரை பானைக்கல் வீதியில் அமைந்துள்ள கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற தி. மு. க. ஊழியர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு தமிழக அரசின் கொள்கைகளை—குறிப்பாக மொழிப் பிரச்சினையில் அரசின் கொள்கையை விளக்கி ஒன்றரை ணி நேரம் பேசினுர்.

### கழகப் பொதுக்கூட்டம்

அன்று இரவு மதுரை கூடலழகர் பெருமாள்கோயில் முன்னிலையில் மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி. தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது; அதில் கலந்துகொண்ட அமைச்சர், தமிழச் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வரய்ந்த தீர்மானத்தின் நோக்கங்கள் விளக்கிச் சொற்பொழிவாற்றினுர்.

பல்லாயிரக்கணக்காகக் குழுமியிருந்த மாணவர்களும் பொதுமக்களும் மொழிப் போராட்டத்தில் மறைந்த மாணவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும்வகையில் சில விநாடிகள் அமைதியாக இருந்து மரியாதை செலுத்தினர்.

அமைச்சர் தமது சொற்பொழிவில் மதுரை மாநகருக்கும்—தமக்கும் மொழிப் போராட்ட நேரங்களில் எப்பொழுதுமே ஒரு தொடர்பு இருந்துவந்தது என்றும், மாணவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் பணியிலும் தாம் மதுரை வந்தது பொருத்தமே என்றும் கூறினுர்.

"மாணவர்கள் பணி முடிந்தது! தமிழக அரசின் பணி துவங்கியிருக்கிறது; மாணவர்கள் இனிப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் ஒழுங்காகச் செல்ல வேண்டும்" என அவர் கேட்டுக்கொண்டார்.

அமைச்சரின் அறிவுரையைக் கேட்ட மாணவர்கள், அதன்படி நடக்க உறுதி கூறும் முறையில் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

மாணவர் பிரதிநிதிகளும் அமைச்சரைச் சந்தித்து தமிழக அரசைப் பாராட்டினுர்கள்; தாங்கள் இனி பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் போகத் தயார் என்று உறுதி கூறினுர்கள்.

### குடியரசு நாள் விழா

26—1—68 காலை 8-மணிக்கு குடியரசு நாள் அணிவகுப்பு மரியாதையைக் கல்வி அமைச்சர், மதுரை காவல் படையினரின் அணிவகுப்பு மைதானத்தில் ஏற்றுக்கொண்டார். தேசியக் கொடியை ஏற்றிவைத்துச் சொற்பொழிவாற்றினுர்.

### திருப்புவனத்தில்

அன்று காலை 10-மணிக்கு மதுரையிலிருந்து புறப்பட்டு முகவை செல்லும் வழியில் திருப்புவனத்தில் கழகத் தோழர்கள் அமைச்சருக்கு உற்சாகமான வரவேற்பு அளித்தார்கள். மாணவர்கள் திரண்டு வந்திருந்தனர். அமைச்சர் சுமார் 45 நிமிட நேரம் தமிழகச் சட்டப் பேரவையின் தீர்மானத்தையும், மொழிக் கொள்கையையும் விளக்கிப் பேசினுர்.

கடுமையான வெயிலையும் பொருட்படுத்தாது மாணவர்கள், அமைதியாக அமைச்சரின் அறிவுரையைக் கேட்டனர்.

### இராமநாதபுரத்தில்

பிற்பகல் 1-மணியளவில் இராமநாதபுரத்திற்கு அமைச்சர் காரில் வந்து சேர்ந்தார். கல்லூரி மாணவர்கள் அமைச்சரைச் சந்தித்து தமிழக அரசின் மொழிக் கொள்கையைப் பாராட்டி நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

பிற்பகல் 4-மணிக்கு துவங்கிய அமைச்சரின் சுற்றுப்பயணம் இரவு 2½ மணிவரை நீடித்தது. இராமநாதபுரத்தைச் சுற்றியுள்ள பின்வரும் கிராமங்களுக்கும் பேருர்களுக்கும் சென்று மொழிக் கொள்கையை விளக்கிப் பேசினுர்—

ரகுநாதபுரம்
உடைச்சியார்வளாசல்
அலாங்குளம்
பனைச்குளம்
புதுவளாசல்
அத்தியுத்தி
சித்தார் கோட்டை
தேவிபட்டணம்
அச்சுதன்வயல் (இந்தக் கிராமத்தில் புதிதாக மின் விளக்குகள் அமைச்சரால் ஏற்றி வைக்கப்பட்டன.

இராமநாதபுரத்தில் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் சங்கக் கூட்டணி, அமைச்சருக்கு வரவேற்பு அளித்தது; இந்த வரவேற்பிலும் அமைச்சர் அரசின் மொழிக் கொள்கையை விளக்கினுர்.

பின்னர், நள்ளிரவில் சரியாக 12 மணிக்கு இராமநாதபுரம் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில்—கொட்டும் பனியையும் பொருட்படுத்தாது — பல்லாயிரக்கணக்கான மாணவர்களும், மக்களும், அமைச்சரின் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தனர்.

இந்தி மொழி ஆதிக்கம் செலுத்த முயலுவதையும், அதை முறியடிக்கத் தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையும் விவரித்து அமைச்சர் சொற்பொழிவாற்றினுர்.

சுருங்கக் கூறின், அமைச்சர் சென்றவிடமெல்லாம் மாணவர்களும் பொதுமக்களும், தமிழக அரசின் மொழிக் கொள்கையையும் 23—1—68 அன்று தமிழகச் சட்டப் பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தையும் பாராட்டினுர்கள்.

மாணவர்கள் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்லத் தயாராக இருக்கின்றனர்.

---

## சென்னைத் துறைமுக ஊழியர் சீருடைக் கோரிக்கை

### பரிசிலனை செய்ய ஒரு நபர் குழு நியமனம்

புதுடில்லி, சன. 30—

'இலவசச் சீருடை வழங்க வேண்டும்' என்ற சென்னைத்துறைமுகத் தொழிலாசிர்களின கோரிக்கை நியாயமானதுதானு? அப்படியானுல், தொழிலாளர்களுக்கு இலவசச் சீருடை வழங்குவதறகான அடிப்படைக் கொள்கைகள் எவை?—என்பதையெல்லாம் முடிவு செய்ய ஒரு நபர் தொழில் டிரிபியூனலை இந்திய அரசு நியமித்திருக்கிறது.

சென்னைத் துறைமுக ரேவுத் தொழிலாளர் போர்டுக்கும்—அதன் தொழிலாளர்களுக்குமிடையேயுள்ள இத்தகராறில் சமரசத் தீர்வு ஒன்றைச் செய்து வைக்க கமலா சகாய் என்பவர் நியமிககப்பட்டிருக்கிருர்.

---

## சென்னை 6-வது வட்ட

### மு. கருணுநிதி படிப்பகம்

மேற்படி படிப்பக நிர்வாகிகள் தேர்தல், 31—12—67 அன்று க. கணேசன் தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :-

தலைவர் : ரா. கோபால்; துணைத் தலைவர் : சி. எஸ். மணி; செயலாளர் : செ. வீரபாண்டியன; துணைச்செயலாளர் : கே. கோதண்டன்; பொருளாளர் : சபாபதி; காப்பாளர் : வ. கந்தன்.

---

## அண்ணுவின் அரிய செயல்

### தமிழ் வளர்ச்சி மன்றப் பாராட்டு

சென்னை தமிழ் வளர்ச்சி மன்றச் செயலாளர் இராம சுப்பிரமணியம் அறிவிப்பதாவது :—

இந்தியர்க்கு இருபது ஆண்டுகளுக்குமுன்பு சுதந்தரம் கிடைத்தது என்ருலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் உண்மையான சுதந்தரம் '23-1-68 அன்று தான் கிடைத்தது!

பல்லாண்டுக்காலமாக அணியிழந்து, முடியிழந்து அல்லலுற்றுவந்த தமிழன்னை அன்றுதான் அரியணையில் உரிய வகையில் அமர்ந்தாள்—அதன் வாயிலாக அவள் மக்களாகிய தமிழரும் உண்மைச் சுதந்தரத்தைப் பெற்றனர்!

தமிழக அரசின் அரியாசனத்தின்கீழ் முட்செடி ஒன்று இருபது ஆண்டுகளாக இருந்துவந்தது; அது, தமிழர் அனைவர் உள்ளத்திலேயும் தன் கிளைகளைப் பரப்பித் தன்பால் அமர்கின்றவர்களையும், தமிழர்களையும் உறுத்திக் கொண்டே இருந்தது. இறுதியில் வீரத் தமிழர் பலர் உயிர்களைக் கவர்ந்ததோடன்றி மாபெரும் கட்சி ஒன்றினையும் கவிழ்த்துவிட்டது. இத்தகு கொடியதொன்று இருந்தும், இந்நாள்வரை தன் சுயவடிவு ஒருவருக்கும் புலனுகா வகையில் மறைந்துவந்தது; அதனை முதலமைச்சர், தம் திறத்தால் வேரோடு களைந்துவிட்டார்; இனி, எவரும் தமிழக அரியாசனத்தில் அமைதியாக அமரலாம்.

தமிழன்னையின் தளையைத் தகர்த்து அவளை அரியாசனத்தில் அமர்த்திய மாண்புமிகு அண்ணு அவர்களுக்கும், ஏனைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழ் வளர்ச்சி மன்றச் சார்பில் மனமார்ந்த நன்றியினையும், வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வாழ்க தமிழக அரசு!

---

## தமிழக மின்கழகக் கணக்காயர் சங்கம்

தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் சங்க கோவில்பட்டி கிளையின் பொது உறுப்பினர் கூட்டம், திரு. பேஸில் ஸ்டீபன் தலைமையில் சன. 19-ல் நடைபெற்றபோது, எம். ரெங்கராசு செயலாளராகவும், சுப்பா நாகுலு துணைச்செயலாளராகவும், சவரிமுத்து பொருளாளராகவும், ச. இராமகிருஷ்ணன் மத்தியப் பொதுக் குழு உறுப்பினராகவும், மற்றும் சு. பழனியப்பன், பி. ஆறுமுகம், இரா. செல்வகணபதி, அ. ஆறுமுக நயினுர், மு. கிருஷ்ணமூர்த்தி, பி. பெருமாள், வெ. செல்லப்பா, சு. நெல்லையப்பன் ஆகியோர் கிளைச் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கடந்த கால நிர்வாகிகளின் சாதனையைப் பாராட்டியும், புதிய நிர்வாகிகளை வரவேற்று முழு ஒத்துழைப்புத் தருவதென உறுதி அளித்தும் பலர் உரையாற்றினர்.

---

## இந்தித் திணிப்புக்கு

### வழக்கறிஞர்கள் எதிர்ப்பு

பாண்டிச்சேரி, சன. 29—

"இந்தி பேசாத பகுதி மக்கள் மீது மத்திய அரசு இந்தியைத் திணிப்பதை வன்மையாக எதிர்க்கிருேம்"

என, பாண்டிச்சேரி வழக்கறிஞர்கள் சங்கம் ஒருமனதாக எதிர்ப்புத் தெரிவித்தது.

அண்மையில் செய்யப்பட்ட ஆட்சிமொழிச் சட்டத் திருத்தத்தையும் அதன் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் வழக்கறிஞர்கள் சங்கம் கண்டித்தது.

திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டுமென்றும் ஆங்கிலம் தொடர்ந்து மத்திய ஆட்சி மொழியாக இருக்க அனுமதிக்க வேண்டுமென்றும் அச்சங்கம் வற்புறுத்தியுள்ளது.

---

## தமிழக அரசின் இந்தி ஒழிப்பு நடவடிக்கை

### சென்னைப் புலவர் மன்றம் வரவேற்பு

25—1—68-ல் கூடிய சென்னைப் புலவர் மன்றம் கீழ்க்காணும் தீர்மானங்களை நிறைவேற்றியது.

தமிழகத் தலைநகரில் உலகத் தமிழ் மாநாடு கொண்டாடியதைத் தொடர்ந்து இரு மொழிக் கொள்கையைத் தமிழ் நாட்டில் அமுலுக்குக் கொண்டுவந்து, இந்தியைத் தமிழகத்தினின்றும் அறவே நீக்கிய தமிழக அரசையும், சிறப்பாக முதலமைச்சரையும், ஏனைய அமைச்சர்களையும் இப்புலவர் மன்றம் அகம்குளிரப் பாராட்டி வாழ்த்துகிறது

வருகிற கல்வியாண்டு முதல் தமிழகக் கல்லூரிகளில் தமிழைக் கற்பிக்கும் மொழியாக ஏற்பாடு செய்தமை குறித்து தமிழக அரசுக்கு வாழ்த்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழக மாணவர்களின் விருப்பத்திற்கிணங்கத் தமிழ் நாட்டினின்றும் இந்தியை அறவே நீக்கித் தமிழையும் ஆங்கிலத்தையும் பயிற்று மொழியாகச் செய்த தமிழக அரசுக்கு நன்றியும் வணக்கமும் தெரிவிக்கும் வகையில் கல்வி நிலையங்கள் திறந்தவுடன் தங்கள் வகுப்பிற்கு மனமகிழ்வுடன் செல்லுமாறு மாணவ மணிகளை வேண்டிக் கொள்கிறது.

இந்தி எதிர்ப்பில் இன்னுயிர் நீத்த பெரியோர்களுக்கும் மாணவ மணிகளுக்கும் தன் வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

இந்தி மொழியைத் தமிழகத்திலிருந்து அறவே நீக்கிய தமிழக அரசின் செயலைப் பாராட்டி மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வகையில் புலவர் மன்றத்தின் சார்பில் இனிப்பு வழங்கப்பட்டது.

---

## காலடிப்பேட்டை

### பொற்செழியன் மன்றம்

சென்னை—திருவொற்றியூர் காலடிப்பேட்டை எழுத்துக்காரன் தெருவில் பொற்செழியன் மன்றம் நிறுவப்பட்டு, நகர தி. மு. கழகச் செயலாளர் வை. பார்த்தசாரதி தலைமையில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர் : எம். நடராசன்; செயலாளர் : கோவிந்தசாமி; துணைச் செயலாளர் : சண்முகம்; செயற்குழு உறுப்பினர்கள் : ஈ. என். ரங்கநாதன்; பி.இராமன், டி. எஸ். கேசவன், பழனி, இளஞ்செழியன், டி. திருநாவுக்கரசு, கோதண்டபாணி, மணிலிங்கம், எம்.கெம்பு, புண்ணியமூர்த்தி.

---

## சென்னை மணவழகர் மன்றம்

மேற்படி மன்ற நிர்வாகிகள் விவரம் வருமாறு :—

தலைவர் : கே. ஏ. கிருட்டினசாமி எம்.ஏ.பி.எல். ; துணைத் தலைவர் : த. மா, இளவழகன்; செயலாளர் : கூ. இர. இராசாமணி; துணைச் செயலாளர் : பா. ர. இலக்குமிபதி; பொருளாளர் : பா. வளவன்; கணக்காயர் : இரா. நக்கீரன்; இரவுப் பள்ளிப் பொறுப்பாளர் : வி. எம். சாமிநாதன்; பட்டி மன்றப் பொறுப்பாளர் : கி. மோகனரங்கம்; நூல் நிலையப் பொறுப்பாளர் : க. முருகேசன்; படிப்பகப் பொறுப்பாளர் : மா. வேலாயுதம்; இலக்கிய வகுப்புப் பொறுப்பாளர் : சி. ஏ. இரத்தினம்; செயற்குழு உறுப்பினர்கள் : வி. எம். பரமசிவம், எம். டி. சீதாராமன், த. தா. இராதாகிருட்டினன், கே. எல். பாண்டுரங்கம்.

---

## வாழ்க்கைச் செலவுப் புள்ளி

சனவரி 20-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி, எவ்வித மாற்றமும் இன்றி 715-ல் நின்றது.

தமிழகத்தில் கீழ்க்கண்ட நகரங்களில், சென்ற டிசம்பர் மாதத்தில் குறைந்த வருமானக்கரரர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி வருமாறு :—

கடலூர் 766; திருச்சிராப்பள்ளி 691; மதுரை 668; கோயம்பத்தூர் 769; நாகர்கோவில் 776.

---

## பித்தலாட்டச் செய்திக்கு மறுப்பு

சென்னை புதுக் கல்லூரி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயலாளர் புகாரி அறிவிப்பதாவது :—

"ஒரு காங்கிரசு நாளேட்டில் எங்கள் புதுக் கல்லூரி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்திலிருந்து எட்டு மாணவர்கள் விலகிவிட்டதாகவும், அவர்கள் தங்கள் விலகல் கடிதங்களை எங்கள் கல்லூரி தி.மா.மு.க. தலைவர் நண்பர் முத்துஜாவிடம் கொடுத்ததாகவும் அவர் பெற்றுக்கொள்ள மறுக்கவே அந்த விலகல் கடிதத்தை என்னிடம் தந்ததாகவும் நான் அந்த மாணவர்களை மிரட்டியதாகவும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

"இந்தச் செய்தி முழுக்க முழுக்கப் பொய்யானதாகும். விலகியதாகக் கூறும் எட்டு மாணவர்களில் நான்கு மாணவர்களின் பெயர்களையும் அப்பத்திரிகை வெளியிட்டுள்ளது; ஆனுல், அது குறிப்பிட்டுள்ள அந்த நான்கு மாணவர்களில் ஒருவர் பெயராவது தி.மா.மு.க. உறுப்பினர் பட்டியலில் இல்லை."

---

## நெய்வேலி தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

### உணவு விடுதி நிர்வாகிகள் தேர்தலில் மகத்தான வெற்றி

நெய்வேலித் தொழிற்சாலைப் பகுதிகளில் உள்ள உணவு விடுதிக்கான நிர்வாகிகள் தேர்தலில், தொழிலாளர் முன்னேற்றச் சங்கமும், கம்யூனிஸ்டுச் சங்கமும் 11 இடங்களுக்கும் போட்டியிட்டன.

அனைத்து இடங்களிலும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கமே வென்றது; கம்யூனிஸ்டுச் சங்கம் ஒரு இடம்கூடப் பெறவில்லை.

வெற்றி பெற்றவர்கள் விவரம்:- சுரங்கப் பகுதி: டி. இராமசாமி, சீனிவாசன், முத்துகிருஷ்ணன்.

அனல் மின்நிலையட :—சிவராஜ, கோபிநாதன்.

உர உற்பத்திச்சாலை :— இரத்தினம், நாகப்பன்.

கரிக் கட்டித் தொழிற்சாலை :— மணிவண்ணன், முத்துவளவன்.

மத்தியத் தொழிற்கூடம் :—ஜி. சபாபதி, ஏ. எஸ். ரெங்கராசன்.

### நன்றியறிவிப்பு

"தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தை ஆதரித்து வாக்களித்த தொழிலாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

"தொ. மு. ச. வெற்றி பெற இடைவிடாமல் உழைத்துச் சங்கத்தை வலுவாக்கிய தொ. மு. ச. உறுப்பினர்கள் — செயற்குழு உறுப்பினர்கள்—துணைச் செயலாளர்கள்—திராவிடர் கழக நண்பர்கள்—நெய்வேலி அண்ணு மன்றம், செல்வராசு மன்றம், கே. வி. கே. சாமி மன்றம், எம். ஜி. ஆர். மன்றம், மறுமலர்ச்சி மன்றம், மற்றும் சார்பு மன்றங்கள்—நகர தி. மு. கழகம் ஆகிய அனைத்திற்கும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என செயலாளர் ச. ஆண்டகுருநாதன் அறிவிக்கிருர்.

---

### மறைவு

திராவிட முன்னேற்றக் கழகத்தில் சிறந்த தொண்டராக இருந்து அயராது பணியாற்றியவரும், சென்னை 70-வது வட்ட கிளைக் கழகப் பொருளாளராக இருந்தவருமான எஸ். மோகன் முனுசாமி 27—1—68-ல் இயற்கையெய்தினுர் என்ற செய்தி வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

குடந்தை நகர தி. மு. க. பொருளாளர் சை. சர்புதின அவர்களின் அன்னையார் 19-1-68-ல் இயற்கையெய்தினுர்; அன்று மாலை 6-மணிக்கு நடந்த சவ அடக்கத்தில் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

# காமராசர்—சுப்பிரமணியம் போடும் தப்புக் கணக்கு!

## மொழிப் பிரச்சினைக்குப் புதிய பரிகாரம் காணப்போகின்றனராம்

### இழந்த செல்வாக்கை மீண்டும் பெற முயற்சியாம்

புதுடில்லி, சன. 31—

தமிழகத்தில் தி. மு. கழகத்தின் மொழிக் கொள்கைக்கு எதிராக ஒரு மாற்றுக் கருத்தைப் பரப்பக் காமராசரும் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியமும் முடிவு செய்துள்ளனர்; ஆனால், அவர்கள் எந்த அளவுக்கு இம்முயற்சியில் வெற்றிபெறுவார்கள் என்பது, அ. இ. கா. க. செயற்குழுவின் முடிவின்மீது மத்திய அரசு மேற்கொள்ளும் செயலைப் பொறுத்திருக்கிறது.

'மத்திய அரசில் வேலைவாய்ப்புகள் பெறுவதற்கு இந்தி அல்லது ஆங்கிலம் ஏதேனும் ஒன்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்' என்று ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதாவின் தீர்மானம் கூறுகின்றது; இதனை, 'ஆங்கிலம்—இந்தி ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்' என்று மாற்றியமைக்கக் காமராசர் விரும்புகிறார்.

ஆங்கிலம் அகற்றப்படுவதை வெறுக்கும் அளவுக்குத் தென்னாட்டவர்கள், இந்தி ஆட்சிமொழியாக்கப்படுவதை வெறுக்கவில்லை என்று அவர் கருதுகிறார்.

காமராசரின் கருத்துக்கேற்ப ஆட்சி மொழித் தீர்மானத்தில் மாறுதல் செய்யக் காங்கிரசு செயற்குழு உடன்படுமானால் தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி அதற்கு ஆதரவாகவும், தி. மு. கழகத்தின் மொழிக் கொள்கைக்கு எதிராகவும் முழுமூச்சுடன் பிரச்சாரம் செய்யுமாம்.

தி. மு. கழக அரசு மொழிப் பிரச்சினையினால் மட்டுமே உயிர் வாழ்ந்துகொண்டிருப்பதாகக் காங்கிரசுத் தலைவர்கள் தப்புக் கணக்குப் போட்டு, 'மொழிச் சிக்கலில் ஒரு தீர்வு ஏற்பட்டுவிடுமேயானால், தமிழ்நாட்டில் காங்கிரசு தனது இழந்த செல்வாக்கைப் பெறத் தொடங்கிவிடும்' என்றும் நம்புகின்றனராம்!

# தமிழ்நாட்டில் மார்வாரிகளுக்கு ஆபத்தாம்!

## இராஜஸ்தான் சட்டமன்றத்தில் ஒருவர் ஓலம்!

### அண்ணாவுக்குக் கடிதம் எழுதியிருப்பதாக முதல்வர் தகவல்

ஜெய்ப்பூர், சன. 31—

தமிழ்நாட்டில் உள்ள மார்வாரிகளுக்கு, (இராஜஸ்தானில்) ஏதோ பெரிய ஆபத்து வந்துவிட்டதாகவும், இங்குள்ள மார்வாரிகளெல்லாம் மொழிக் கிளர்ச்சியின் பெயரால் தாக்கப்படுவதாகவும், இதனால் தமிழ்நாட்டில் உள்ள மார்வாரிகளெல்லாம் மூட்டை முடிச்சுகளுடன் தங்கள் சொந்த மாநிலத்துக்கே திரும்பிவிட முனைந்தும், அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கத் தமிழக அரசு மறுத்துவிட்டதாகவும், அண்மையில் தாம் சென்னைக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள நிலைமையை நேரில் கண்டதாகவும், இராஜஸ்தான் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவர் கூச்சலிட்டிருக்கிறார்!

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர் திரு. மோகன்லால் சுகாதியா, தமிழ்நாட்டிலுள்ள மார்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்குமாறு தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கட்குக் கடிதம் எழுதியிருப்பதாக அறிவித்திருக்கிறார்.

அவர் மேலும் பேசுகையில், 'இந்தியக் குடிமகனாக உள்ள எவரும், இந்திய நாட்டின் எந்தப் பகுதியில் தாக்குதலுக்குள்ளானாலும் அது அரசியல் சட்டத்துக்கு எதிரான செயலாகும்' என்றும், 'இப்படிப்பட்ட செயல்களை ஆங்காங்குள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தடுத்து நிறுத்துவர்' என்றும் கூறியிருக்கிறார்.

தமிழகம், அசாம், மேற்கு வங்காளம் ஆகிய இடங்களில் இராஜஸ்தானிகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து, மத்திய அரசின் உள்துறையமைச்சரிடம் முறையீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

[தமிழ்நாட்டில் மொழிக் கிளர்ச்சியினையொட்டி எந்த ஒரு மார்வாரியும் தாக்கப்பட்டதாகச் செய்தி இல்லை. சென்னையில் உள்ள இராஜஸ்தானிகள் சங்கத்தில் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு வரவேற்புக் கொடுக்கப்பட்டதும், அண்ணா அவர்கள் வரவேற்பைப் பெற்றுக்கொண்டு இராஜஸ்தானிகளின் சிறந்த பணிகளைப் பாராட்டியதும், அவர்கள் தமிழகத்திலேயே தங்கி வாழ்ந்துவர எவ்விதத் தடையுமில்லை என்றும், அவர்களுக்கும் — தமிழர்களுக்கும் இடையே நல்லுறவு நீடித்து நிலவும் என்றும் கூறியது நினைவிருக்கலாம்.]

# புதுவைக்குத் தனிப் பல்கலைக் கழகம்

புதுவை, சன. 31—

"புதுவை மாநிலத்திற்கென்று ஒரு தனிப் பல்கலைக் கழகம் விரைவில் ஏற்படுத்தப்படும்" என்று, புதுவை கவர்னர் திரு. சீலம் தெரிவித்தார்.

புதுவைத் தமிழ்ச் சங்கத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"புதிதாக வேளாண்மைக் கல்லூரி ஒன்று துவக்கப்படும். அத்துடன் தற்போதுள்ள பல்தொழிற் பயிற்சிப் பள்ளியைக் கல்லூரி நிலைக்கு உயர்த்தி, புதிய பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படும்."

# காந்தியார் நினைவு நாள்

## தியாகிகளுக்கு வீர வணக்கம்

### அண்ணா — அமைச்சர்கள் பங்கேற்ற நிகழ்ச்சி

சென்னை, சன. 30—

சென்னை கோட்டையில் இன்று காலை காந்தியார் நினைவு நாள் மேற்கொள்ளப்பட்டு தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

கோட்டை அணிவகுப்புத் திடலில் காலை 11-மணிக்கு அரசு ஊழியர்கள் கூடி வீர வணக்கம் செலுத்தினர்.

ஆளுநர் உஜ்ஜல் சிங், முதலமைச்சர் அண்ணா, அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, செ. மாதவன், திருமதி சத்தியவாணிமுத்து, தலைமைச் செயலர் இராமகிருஷ்ணன் ஆகியோரும் கூடியிருந்து வீர வணக்கம் செலுத்தினர்.

காலை 11-மணிக்கு சென்னை நகரிலுள்ள 43 சங்குகளும் முழங்க அண்ணல் காந்தியார் நினைவாக 2 நிமிட நேரம் தியாகிகளுக்கு வீர வணக்கம் தெரிவிக்கப்பட்டது.

# ஆந்திரத்தில் இந்தி எதிர்ப்பு கிளர்ச்சி வலுக்கிறது

## இந்திரா கொடும்பாவி எரிப்பு — இரயில் நிலையத்துக்கு தீ வைப்பு

### காக்கிநாடாவில் பள்ளிகள் — கல்லூரிகள் மூடப்பட்டன

பீமாவரம், சன. 30—

இவ்வூர் கல்லூரி மாணவர்கள், இங்குள்ள வேந்த்ரா இரயில் நிலையத்தைத் தீவைத்துக் கொளுத்தினர். பார்சல் அறையும், சாமான்கள் அறையும் தீப்பற்றி நாசமாயின.

தலைமையமைச்சர் இந்திரா காந்தியின் கொடும்பாவியையும் இழுத்துவந்து மாணவர்கள் கொளுத்தினர்.

அஞ்சல் நிலையங்களில் இருந்த இந்தி எழுத்துக்களையெல்லாம் அழித்தனர்.

டி.என்.ஆர். கல்லூரியின் முதல்வர், கல்லூரியை பிப்ரவரி 12-ம் நாள்வரை மூடியிருப்பதாக அறிவித்தார்.

நேற்று, ஆந்திர மாநிலத்தின் பல்வேறு இடங்களில் இரயில்கள் நிறுத்தப்பட்டதாக ஐதராபாத் போலீசுத் தலைமையகத்துக்குத் தகவல்கள் வந்துள்ளன.

விசாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த அனகாபள்ளியில், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், பூரி – ஐதராபாத் எக்ஸ்பிரஸ் வண்டியை நிறுத்தினர்.

காக்கிநாடாவில் எல்லா உயர்நிலைப் பள்ளிகளும், கல்லூரிகளும் மூடப்பட்டன.

# சென்னை வானொலிச் சிறுவர் சங்கப் பேரவை

அண்மையில் நடைபெற்ற சென்னை வானொலிச் சிறுவர் சங்கப் பேரவைக்குக் கீழ்வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்:—தலைவர்: புலவர் தணிகை உலகநாதன்; துணைத் தலைவர்கள்: டி. செல்வராசன், எம். விஜயலக்குமி; செயலாளர்கள்: ஜி. கார்த்திகேயன், ஏ. வி. டீகாராமன்; பொருளாளர்: வி. சரோஜா; செயற்குழு உறுப்பினர்கள்: என். எஸ். பானுகுமார், ஜே. சாந்தா, எஸ். வச்சிரவேலு, ஓ.என. சாரதா, ஆர். சுப்பிரமணியம்; ஆலோசகர்: வானொலி அண்ணா ஆர். அய்யாசாமி.

# கருநாடகக் கல்லூரிகள் காலவரையின்றி மூடப்பட்டன

## மாணவர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி எதிரொலி

பெங்களூர், சன. 30—

கருநாடக மாநிலத்தில் மூண்டுள்ள மாணவர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியையொட்டி, மைசூர்—பெங்களூர்ப் பல்கலைக் கழகங்கள் காலவரம்பின்றி மூடப்பட்டன.

மைசூர்ப் பல்கலைக் கழகம், தனது விடுதியில் தங்கியுள்ள மாணவர்களைவிட்டு வெளியேறுமாறு, மாணவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

பெங்களூர்க் கல்லூரிகள் இன்றுதான் விடுமுறைக்குப்பின் திறக்கப்பட்டன; ஆனால், மைசூர் பல்கலைக் கழக முடிவையடுத்து, பெங்களூர்ப் பல்கலைக் கழகமும் மீண்டும் காலவரையின்றி மூட முடிவு செய்துவிட்டது.

தற்போது நடைமுறையில் உள்ள தடையுத்தரவு நீக்கப்படும் வரை, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை நிறுத்தி வைத்திருப்பதாக மாணவர் குழுத் தலைவர் கே. ஜாவர் கவுடா, மைசூர் கிரபோர்டு மண்டபத்தில், மைசூர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் கே. எல். ஸ்ரீமாலி முன்னிலையில் தெரிவித்தார்.

மாணவர் கிளர்ச்சியையொட்டி, சமூக விரோதச் செயலில் ஈடுபட்டதாக 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# இலவச சித்த மருத்துவ நிலையம்

## அரசுத் தலைமை அலுவலகத்தில் திறக்கப்பட்டது

சென்னை, சன. 30—

தமிழக அரசுத் தலைமை அலுவலகத்தில், சித்த மருத்துவ நிலையம் ஒன்றை, சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா திறந்துவைத்தார்.

"தலைமை அலுவலகத்தில் மட்டுமன்றி, மாநிலமெங்கணும் இதுபோன்ற மருத்துவ நிலையங்கள் திறக்கப்படும்" என்று அமைச்சர் தெரிவித்தார்.

கோட்டையில் இலவச சித்த மருத்துவமனை காலை 10-30 மணி முதல் மாலை 5 மணி வரையில் திறந்திருக்கும்; அரசு செயலக ஊழியர்களும், கோட்டைப் பகுதியில் வசிப்பவர்களும் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.

மதுரை, திருச்சி, கோவை போன்ற நகரங்களில் விரைவில் இதேபோன்று இலவச சித்த மருத்துவ மனைகள் திறக்கப்படும் என்று தெரிகிறது.

# பிப்ரவரி 5-ல் கல்வி நிலையங்கள் திறக்கப்படும்

## தேர்வுகள் ஒத்திவைப்பு

சென்னை, சன. 31—

தமிழகத்தில், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியையொட்டி மூடப்பட்டிருக்கும் எல்லாக் கல்வி நிலையங்களும், வருகிற பிப். 5-ஆம் நாள் திறக்கப்படும்.

இத்தகவலை, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் நேற்று செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வும், மற்ற தேர்வுகளும் ஒத்திவைக்கப்படக் கூடும் என்றும், தேர்வுகள் நடைபெறும் நாட்களை பின்னர் அரசு அறிவிக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கல்வி நிலையங்களை இன்னும் சில நாள் முன்னதாகவே திறக்கவேண்டும் என்று அரசு கருதியபோதிலும், மாணவர்கள் வந்து சேரப் போதிய காலம் தேவைப்படும் என்று கல்வி நிலையத் தலைவர்கள் விரும்பியதால் பிப்ரவரி 5-ல் திறக்க அரசு முடிவு செய்ததாகத் தெரிகிறது.

# சென்னை கண் மருத்துவமனை

## நவீன வசதியுள்ளதாகப் புதுப்பிக்கப்படும்

மதுரை, சன. 31—

"சென்னையில் உள்ள அரசினர் கண் மருத்துவமனை நவீன வசதிகளுடன் கூடியதாகத் திருத்தியமைக்க ரூ. 18 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டிருக்கிறது" என்று மருத்துவக் கல்வித்துறை இயக்குநர் திரு. டி. சனார்த்தனன் இங்கு தெரிவித்தார்.

இங்கு, எர்ஸ்கின் மருத்துவமனையில் சமூக மறுவாழ்வளிப்புத் துறையினர் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கினைத் துவக்கிவைத்துப் பேசிய அவர், மேலும் தெரிவித்ததாவது:—

"அடுத்த ஆண்டு முதல் சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில், பார்வையற்றவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கான பயிற்சி வகுப்பு ஒன்றினைத் துவக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது."

# 'ஒரு பிரிவினரின் தாய்மொழியை அகற்றுவது அக்கிரமமானதாகும்'

## 'இணைப்பு மொழி என்ற தகுதி இந்திக்கு என்றுமே ஏற்பட இயலாது'

### 'இந்தித் திணிப்பை எதிர்க்கும் உரிமை இந்தி பேசாத மக்களுக்கு உண்டு'—முன்னாள் ஜெனரல் கரியப்பா தெளிவுரை

பெல்லாரி, சன. 31—

"தங்கள் மீது இந்தி திணிக்கப்படுவதை எதிர்க்க இந்தி பேசாத பகுதி மக்களுக்கு அதிக அளவில் உரிமை உண்டு; 'மத்திய அரசு அலுவலர் தேர்வுக் குழுப் பரீட்சைக்கு இந்தி தேவையில்லை' என அவர்கள் மறுக்க வேண்டும்"

என்று, முன்னாள் இராணுவத் தளபதி கே. எம. கரியப்பா வற்புறுத்தியுள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"உலக ஒற்றுமை பற்றி சிந்திக்கப்படும் இந்த நேரத்தில், நாட்டிலிருந்து ஆங்கிலத்தை ஒழித்துவிட வேண்டுமென வாய்க்கு வந்தபடி பேசுவது நல்லதல்ல; ஆங்கிலத்தை ஒழிப்பது என்பது, சிந்திக்க முடியாத ஒன்றாகும்.

"தொடர்பு மொழியாக இந்தி இருக்க வேண்டுமென்பது, இயலாததாகும்.

"இணைப்பு மொழி என்பது, இதயபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும் மொழியாக இருக்க வேண்டும்; இன்னும் பல ஆண்டுகளுக்கு ஆங்கிலம்தான் இந்நாட்டின் தொடர்பு மொழியாக இருக்க வேண்டும்.

"நாட்டு மக்களில் ஒரு முக்கிய பிரிவினரின்—ஆங்கிலோ–இந்தியரின் தாய் மொழியான ஆங்கிலத்தை அகற்ற வேண்டும் எனக் கூறுவது அக்கிரமமானதாகும்."

# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு

## அண்ணா கலந்துகொள்கிறார்

சென்னை, சன. 31—

நாளை திருச்சியில் நடைபெறவிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொள்கிறார்.

# சென்னை 39-வது வட்ட பொது உறுப்பினர் கூட்டம்

சென்னை 39-வது வட்ட பொது உறுப்பினர் கூட்டம், 4—2—68 காலை 8-மணிக்கு, கழகப் பணிமனையில் நடைபெறும்; பொது உறுப்பினர்கள் இதனையே அழைப்பாக ஏற்று வந்து கலந்துகொள்ளுமாறு செயலாளர் திரு. டி. கிருஷ்ணமூர்த்தி கேட்டுக்கொள்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.